[திரு. எ. முனியாண்டி] [1968 மார்ச் 5

அடுத்தபடியாக, ஹரிஜன மாணவர்கள், அவர்கள் விடுதியிலே படிக்கின்றபொழுது கொடுக்கின்ற பணத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டு காலமாகவே சர்க்காரைக் கேட்டு வந்திருக்கிறார்கள். அது ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்ததைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்று அவர்களுக்கு அதிகமாகப் பணம் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, சேரியிலே சீந்துவாரற்று சீரழிந்து கிடக்கின்ற சின்னஞ்சிறார்களுக்கு சீருடை வழங்கும் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டவும் அதற்கு நன்றி கூறவும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, பின் தங்கிய மக்கள், பெருங்குடி மக்கள் வாழ்வதற்கு திட்ட ஆலேக் குழு குறைந்த தொகை ஒதுக்குவதற்குப் பரிந்துரை செய்திருந்தும் இந்த சர்க்காரால் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த திட்டத்தையும் நான் முழுமனதோடு பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்று சொல்லிக் கொள்கிறேன். பல்லாண்டு காலமாகக் கூறி வந்த திட்டம், பலரால் தடுத்து நிறுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியதற்குக் காரணம் அந்தத் தொகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நிலச்சுவான்தார்கள் பகுதியிலே அந்த நல்ல திட்டம் அமைந்திருக்கிறது என்பதுதான். அவர்கள் காங்கிரஸ் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததால் அதைச் செய்யாமல் விட்டிருந்தார்கள். இந்த சர்க்கார் நிச்சயமாக அதைச் செய்யும் என்ற நம்பிக்கையில் நான் அதைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். பீலிக்கரடு அணை என்ற அந்தத் திட்டத்தைச் செயல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 20 ஆண்டுக் காலமாக ஆண்டவர்களால் அது செயல்படுத்தப்படாமல் இருந்தது. அதைச் செயல் முறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கொடவனூற்றிலிருந்து வீணக ஓடிக்கொண்டிருக்கின்ற நீரைத் தடுத்து நிலக்கோட்டைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அந்தத் திட்டத்தை முன் வைத்திருக்கிறேன். செங்கட்டாம்பட்டி கண்மாயிலிருந்து புல்லுவெட்டிக் கால்வாய் மூலம் அந்தத் தண்ணீரை நிலக்கோட்டைப் பகுதிக்குப் பாய்ச்சலாம் என்றும் கூறி இருக்கிறேன். வைகை ஆற்றின் குறுக்கே இரண்டாவது பெரிய அணைக்கட்டு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அந்த அணையிலிருந்து என்னுடைய தொகுதிக்கு அமைச்சர்கள் எல்லாம் வருகின்ற பொழுது கூட நான் சுற்றிச் சுற்றிக் காண்பித்தேன். அந்தப் பகுதியில் நிறைய ஆறுகள் ஓடியும் பலன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த வைகையி லிருந்து இரண்டாவது அணைக்கட்டி லிருந்து எங்களது நிலக்கோட்டைப் பகுதிக்குத் தண்ணீர் அளிக்கின்ற திட்டத்தையும் மஞ்சளாறு–மேம்பாடு திட்டத்தையும் கவனத்திற்குக் கொண்டு வந்து எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை

பி. ப. 1.35. பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்) : இத்துடன் இன்றைய பேரவை நடவடிக்கைகள் முடிவுறுகின்றன. மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

84. Notification issued with G.O. Ms. No. 1664, Revenue, dated the 21st September 1967, effecting a ryotwari settlement to certain inam estates in Coimbatore district in accordance with the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. (*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 62 *of* 1963).